1972 ஆகஸ்ட் 21]

பீங்கான் தொழிற்சாலை

* 223 வினா.—திரு. பெ. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளித்தலை, கரூர், மணப்பாரை ஆகிய வட்டங்களில் கிடைக்கும் வெங்கச் செங்கல், பெல் ஸ்பார்களைக் கொண்டு சிறிய அளவில் ஒரு பீங்கான் தொழிற் சாலை துவக்க செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, என்னுடைய வினாவில் குறிப்பிட்ட பகுதிகள் மிகமிகப் பின் தங்கிய பகுதிகள், ஆகவே, அங்கு கிடைக்கின்ற கற்களைக் கொண்டு தனியார் சார்பிலே ஒரு தொழிற்சாலை துவங்க அரசு அனுமதி வழங்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேட்டால் அனுமதி வழங்கலாம்.

கடலைப் புண்ணாக்கிலிருந்து எண்ணெய் எடுத்தல்

* 224 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலைப் புண்ணாக்கிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, எதையெதையோ நாம் இயந்திரமயமாக்குகிறோம். ஆனால் இன்னும், கிராமங்களிலே செக்கிலே இருந்துதான் புண்ணாக்கு எடுக்கிறார்கள். ஏன் அதையும் இயந்திரமயமாக்கக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுதே கிராமங்களிலே இயந்திரங்களிலே புண்ணாக்கு எடுப்பதை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் உறுப்பினர் அவர்கள் கடலைப் புண்ணாக்கிலிருந்து எண்ணெ எடுக்கும் தொழிற்சாலையைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். ஏற்கனவே மூன்று தொழிற்சாலைகள் தமிழ் நாட்டிலே இருக்கின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS